**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.</u>**

முன்னிலை: **திரு.S.கணேஷ்., எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**<u>2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 06–ஆம் நாள் சனிக்கிழமை</u>**
**<u>IA.05/2023 in O.S.428/2010</u>**

ராமசந்திரன், ... மனுதாரர்/1ம் பிரதிவாதி

/எதிர்/

குணசேகரன், ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இறுதியாக 31.01.2024–அன்று விசாரணைக்கு வந்ததில் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.மா.கிருஷ்ணமூர்த்தி, அவர்கள் முன்னிலையாகியும் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், மனு, பிரமாணவாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது மனுதாரர்கள் தரப்பில் சி.பி.சி.ஆர்டர் 26 ரூல் 2 மற்றும் பிரிவு 151–ன் படி அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக, சமூகம் கோர்ட் அட்வகேட் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து 1ம் பிரதிவாதியாகிய ராமச்சந்திரன் இவ்வழக்கில் சாட்சியாக விசாரித்து சாட்சிய வாக்குமூலமும் அத்துடன் கமிஷ்னர் அறிக்கையும் தாக்கல் செய்ய சமூகம் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணிபுரியும் மூத்த வழக்கறிஞர்களில் ஒருவரை கமிஷனராக நியமித்து உத்தரவாக வேண்டி இம்மனு மனுதாரரல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுதாரரின் மனுவின் சுருக்கம் :–</u>**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி என்றும், மனுதாரர் வயோதிகத்தின் காரணமாக நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாக இருக்கிறேன் என்றும், மனுதாரர் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சி சொல்லுமளவிற்கு உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறேன் என்றும், மனுதாரரை வீட்டிலேயே வைத்து விசாரிக்க வேண்டியது மேற்படி சூழ்நிலையில் அவசியமாகிறது என்றும், மனுதாரரை இந்த வழக்கில் விசாரிக்காவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டு விடும் என்றும், எனவே சமூகம் கோர்ட்டில் வழக்கறிஞராக பணிபுரியும் மூத்த

வழக்கறிஞர்களில் ஒருவரை கமிஷ்னராக நியமனம் செய்து மனுதாரரை விசாரித்து மனுதாரர் சாட்சிய வாக்குமூலத்தை பதிவுசெய்து அவருடைய வாக்குமூலத்தையும் கமிஷ்னர் அறிக்கையும் தாக்கல் செய்ய வேண்டுமென்று மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.<u>எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்</u>

மனுதாரரின் மனு சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய பலமுறை வாய்ப்பு கொடுத்தும் மனுதாரர் தரப்பில் முன்வராததால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், 1ம் மனுதாரர் தனக்கு உடல்நிலை சரியில்லை என கூறும் காரணம் ஏற்புடையதாக இல்லை என்றும், மேலும் குறுக்கு விசாரணை செய்ய உள்ள அனைத்து வாய்தாக்களிலும் 1ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்பதினை மனுதாரர்தான் நிரூபிக்க வேண்டும் என்றும், அதற்கான மருத்துவ சான்றிதழ் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றும், வேண்டுமென்றே பொய்யான சங்கதிகளை கூறி வழக்கு நடவடிக்கைகளில் இழுத்தடிக்கவே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி ஒருமுறை இந்த மனுவை அனுமதித்தால் இதனையே வாடிக்கையாக கொண்டு அனைத்து நடவடிக்கைகளிலும் இதனையே பின்பற்றுவார் என்றும், எனவே மனுதாரரின் மனுவினை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்ட வேண்டும் என்று குறிப்பிட்டு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவேனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பது தான்.

<u>6) பிரச்சனைக்கான தீர்வு:-</u>

மனுதாரர் தரப்பு வாதத்தில் மனுதாரர் வயோதிகத்தின் காரணமாக நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாகவும், நீதிமன்றத்திற்கு வந்து சாட்சி சொல்லுமளவிற்கு உடல்நிலை சரியில்லாமலும் இருப்பதால், மனுதாரரை வீட்டிலேயே வைத்து விசாரிக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளது என்றும், மனுதாரரை இந்த வழக்கில் விசாரிக்காவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டு

விடும் என்றும், எனவே சமூகம் கோர்ட்டில் வழக்கறிஞராக பணிபுரியும் மூத்த வழக்கறிஞர்களில் ஒருவரை கமிஷ்னராக நியமனம் செய்து மனுதாரரை விசாரித்து மனுதாரர் சாட்சிய வாக்குமூலத்தை பதிவுசெய்து அவருடைய வாக்குமூலத்தையும் கமிஷ்னர் அறிக்கையும் தாக்கல் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டு வாதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

7. மேற்படி அதனை மறுத்து எதிர்மனுதாரர் தரப்பு மறுப்புரையில் 1ம் மனுதாரர் தனக்கு உடல்நிலை சரியில்லை என கூறும் காரணம் ஏற்புடையதாக இல்லை என்றும், மேலும் குறுக்கு விசாரணை செய்ய உள்ள அனைத்து வாய்தாக்களிலும் 1ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்பதினை மனுதாரர்தான் நிரூபிக்க வேண்டும் என்றும், அதற்கான மருத்துவ சான்றிதழ் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றும், வேண்டுமென்றே பொய்யான சங்கதிகளை கூறி வழக்கு நடவடிக்கைகளில் இழுத்தடிக்கவே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே மனுதாரரின் மனுவினை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்ட வேண்டுமென்று குறிப்பிட்டு வாதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

8. இருதரப்பிலும் மேற்சொன்னவாறு எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில், மனுதாரரின் மனு சங்கதியினை மறுத்து எதிர்மனுதாரர் தரப்பு மறுப்புரை சங்கதி ஏற்புடையதாக உள்ளதாவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், அசல் வழக்கினை பரிசீலனை செய்து பார்க்கையில் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதில் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகளை விசாரணை செய்து தற்போது மனுதாரர் தரப்பு சாட்சிக்காக வாய்தாப்போடப்பட்டுள்ளது. அவ்வாறு உள்ள போது மனுதாரர்/1ம் பிரதிவாதி உடல் நிலை சரியில்லாம் படுத்தப்படுக்கையாக இருப்பதால் நீதிமன்றத்திற்கு சாட்சிக்கு வர இயலாமல் நிலையில் உள்ளதால் சமூக நீதிமன்றத்தில் பணிபுரியும் மூத்த வழக்கறிஞர்களில் ஒருவரை கமிஷ்னராக நியமனம் செய்து மனுதாரை விசாரித்து அவரின் சாட்சி வாக்கு மூலத்தை பதிவு செய்து அவருடைய வாக்கு மூலத்தையும் கமிஷ்னர் அறிக்கையையும் தாக்கல் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. மேற்படி அதனை பார்க்கையில் மனுதாரர்/1ம் பிரதிவாதியின் உடல் நிலை சரியில்லாம் படுத்தப்படுக்கையாக இருப்பதாக மட்டுமே மனுதாரர் மனுவில்

குறிப்பிட்டுள்ளாரே தவிர அவருக்கு என் மாதிரியான உடல் நிலை சரியில்லை என்பதை பற்றியும், அதற்கான என்ன சிகிச்சை செய்து வருகிறார் என்பதை பற்றியும், எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்பதற்கான எந்தவொரு ஆவணத்தையும் மனுதாரர் மனுவில் குறிப்பிடவில்லை. மேலும், அவருக்கு எப்பொழுதிலிருந்து உடல் நிலை சரியில்லாம் படுத்தப்படுக்கையாக இருக்கிறார் என்பதனையும் மனுவில் தெளிவாக குறிப்பிடவில்லை. அவ்வாறு மனுதாரர் தனது மனுவில் எந்தவொரு மருத்துவ சான்றிதழும் தாக்கல் செய்யாமல் வெறும் உடல் நிலை மட்டும் சரியில்லை என்று குறிப்பிட்டுள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. மேலும் மனுதாரர் அசல் வழக்கினை காலம் கடத்தும் யுத்தியாக செயல்படுவதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. மேலும் அசல் வழக்கினை பரிசீலனை செய்து பார்க்கையில் 2010ம் ஆண்டிலிருந்தே மேற்படி வழக்கானது நிலுவையில் இருந்துவருவதை கருத்தில் கொண்டும், மனுதாரரை விசாரிக்க அவரது வீட்டிற்கு சென்று விசாரிக்க வேண்டும் என்று கூறுவதற்கான போதிய காரணங்களையும், மனுதாரருக்கு உடல் நிலை சரியில்லை என்பதனை நிரூபிக்கும் விதமாக எந்தவொரு ஆவணத்தையும் மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்யாததையும் பார்க்கும் போது இதுபோன்ற மனுக்களை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று கருதி மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்வதுதான் உகந்ததே என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

11. முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 06–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

S GANESH Digitally signed by S GANESH
Date: 2024.04.06 10:40:16 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் : இல்லை

S GANESH Digitally signed by S GANESH
Date: 2024.04.06 10:40:27 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.